# 6

# ஜனாபத்திலிருந்து சுத்தம் பெறுவோம்

தூக்கத்திலேற்பட்ட அசாதாரண நிலை காரணமாக அன்பல் விழித்துக் கொண்டான். வழமைக்கு மாறாக ஏற்பட்ட நிலையை நண்பனிடம் தெரிவித்தான். 'நாம் பருவ வயதை அடையும்போது இப்படியான நிலை ஏற்படும். அதற்காகப் பதற்றமடைய வேண்டியதில்லை. குளித்துச் சுத்தமாகிக் கொண்டால் போதுமானது' என நண்பன் கூறினான்.

இருந்தாலும் அவன் மனம் திருப்தியடையவில்லை. இஸ்லாம் பாட ஆசிரியரை அணுகி நடந்ததைத் தயக்கத்துடன் கூறினான். இன்று இஸ்லாம் பாடத்தில் அது பற்றித்தான் படிக்க இருக்கிறோம். இவ்வாறு நிகழ்ந்தால் கடமையான குளிப்பை நிறைவேற்றுவதாக நிய்யத் வைத்துக் குளிக்க வேண்டும் என்றார்.

ஆறாம் பாடவேளைக்காக மணி அடித்ததும் மௌலவி ஆசிரியரும் மற்றொரு ஆசிரியையும் வந்தனர். வகுப்பிலுள்ள மாணவியரை வேறு இடமொன்றுக்கு ஆசிரியை அழைத்துச் சென்றார். ஆசிரியர் பாடத்தை ஆரம்பித்தார்.

'நீங்கள் 'ஜனாபத்' என்ற சொல்லைக் கேள்விப்பட்டிருக்கிறீர்களா'? எனக் கேட்டார். 'ஜனாபத்' என்பது ஓர் அறபுச் சொல். 'தொடக்கு' என்பது அதன் கருத்தாகும் என்று நான் மத்ரஸாவில் படித்திருக்கிறேன் என்றான் ஷிஹாம்.

நல்லது. இதனை முழுக்கு என்றும் கூறுவர். மனித உடலில் இயல்பாக ஏற்படும் சில நிலைமைகள் காரணமாகக் குளிப்பது கடமையாகின்றது. அதனையே ஜனாபத் என்ற சொல் குறித்து நிற்கின்றது. இதனை 'அல்ஹதஸுல் அக்பர்' (பெருந் தொடக்கு) என்றும் அழைப்பதுண்டு. இவ்வாறான நிலையிலிருப்போர் 'ஜுனுப்' என அழைக்கப்படுவர்.

'நீங்கள் ஜனாபத் அடைந்தால் குளித்துச் சுத்தமாகிக் கொள்ளுங்கள்' (5:6) என்று அல்குர்ஆன் குறிப்பிடுகின்றது. 'ஹைழ் (மாதவிடாய்) வந்துவிட்டால் தொழுகையை விட்டு விடுவீராக. அது வெளிவருவது நின்றுவிட்டால் குளித்துவிட்டுத் தொழுவீராக!' என்று நபி ச அவர்கள் ஒரு பெண்மணிக்கு

அறிவுறுத்தினார்கள். இதுவும் ஒருவகை ஜனாபத் ஆகும். ஜனாபத்துடையோர் குளித்துச் சுத்தமாகிக் கொள்ள வேண்டும்.

ஜனாபத்தை ஏற்படுத்தும் காரணங்களைத் தெளிவாக நாம் தெரிந்துகொள்ள வேண்டும். இதனை எவரேனும் கூற முடியுமா? என்று ஆசிரியர் வினவினார். பகுதி நேர மத்ரஸாவுக்குச் செல்லும் ஹுஸ்னி எழுந்து நின்றான். ஆசிரியர் அனுமதி கொடுத்ததும் அவற்றைச் சொல்ல ஆரம்பித்தான்.

1. ஒரு முஸ்லிம் மரணமடைதல்
2. தூக்கத்தில் அல்லது விழிப்பில் இந்திரியம் வெளியாதல்
3. ஆண்-பெண் உடலுறவு கொள்ளல்
4. ஹைழ் ஏற்படல்
5. நிபாஸ் ஏற்படல்

இங்கு பெண்கள் தொடர்பான விடயத்தை மாத்திரம் சுருக்கமாகக் கூறுகிறேன். குறிப்பிட்ட வயதில் ஆண்களும் பெண்களும் பருவமடைவர். ஆண்கள் பருவமடைவதற்கு அறிகுறியாக விந்து வெளியாகின்றது. பெண்கள் பருவமடைவதன் அறிகுறியாக ஹைழ் எனும் உதிரப் போக்கு ஏற்படுகிறது. இதனை மாதவிடாய் எனவும் கூறுவர். இது குறைந்தது ஒரு நாளில் நின்றுவிடும். சிலருக்குப் பதினைந்து நாட்கள் வரை நீடிக்கும். பொதுவான காலம் ஒரு வாரமாகும்.

நிபாஸ் என்பது பிரசவத்தின்போது ஏற்படும் உதிரப் போக்கு. இதன் கால எல்லை குறைந்தது ஒரு விநாடி, கூடியது அறுபது நாட்கள். பெரும்பாலும் நாற்பது நாட்களில் நின்றுவிடும். ஹைழ், நிபாஸ் நின்றதும் அவர்கள் குளித்துச் சுத்தமாகிக் கொள்ள வேண்டும். ஹைழ், நிபாஸ் காலங்களில் பெண்கள் தொழவோ, அல்குர்ஆனை ஓதவோ, தொடவோ, நோன்பு நோற்கவோ கூடாது. சுத்தமான பின் அவர்கள் விடுபட்ட தொழுகையை மீட்ட வேண்டியதில்லை. ஆனால் விடுபட்ட நோன்பைக் கழாச் செய்ய வேண்டும்.

ஆசிரியர் பிரிஸ்டல் அட்டையொன்றைக் காட்சிப்படுத்தி அதனை மாணவனொருவனுக்கு வாசிக்கும்படி பணித்தார்.

ஜனாபத் உடையோர் செய்யக் கூடாதவை

- தொழுதல்
- பள்ளியில் இ.்.திகாப் இருத்தல்
- க.்.பாவைத் தவாப் செய்தல்
- அல்குர்ஆனை ஓதுதல், தொடுதல், சுமத்தல்

ஒரு மாணவர் உரத்து வாசிக்க ஏனையோர் அதனை அவதானித்தனர்.

இத்தோடு மற்றொன்றையும் தெரிந்துகொள்ள வேண்டும். எமது பாலுறுப்பிலிருந்து இந்திரியம் அல்லாத சிறுநீர், மதி, வதி என்ற திரவப் பொருள்களும் வெளியாகின்றன. இவை நஜீஸானவை. இவை வெளியேறினால் குளிக்க வேண்டிய அவசியமில்லை. ஆனால் உறுப்பைக் கழுவுவதோடு அவை படிந்த இடங்களையும் கழுவிச் சுத்தம் செய்துகொள்ள வேண்டும் என விளக்கிய ஆசிரியர், மற்றொரு பிரிஸ்டல் அட்டையை விரித்துக் காட்சிப்படுத்தினார்.

### கடமையான குளிப்பு

**நிபந்தனைகள்**

- மிகச் சுத்தமான நீரைப் பயன்படுத்தல்
- நீர்படுவதைத் தடுக்கக் கூடிய பொருட்கள் உடம்பில் இல்லாதிருத்தல்

**பர்ளுகள்**

- 'பர்ளான குளிப்பை நிறைவேற்றுகிறேன்' என நிய்யத்து வைத்தல்
- உடல் முழுவதையும் சுத்தமான நீரினால் கழுவுதல்

**ஸுன்னத்துகள்**

- குளிக்குமுன் சிறுநீர் கழித்தல்
- உடம்பில் படிந்திருக்கும் அசுத்தங்களை அகற்றிவிடுதல்
- இரு கைகளையும் மணிக்கட்டு வரையில் கழுவிக் கொள்ளல்
- வாய் கொப்பளித்தல், நாசிக்கு நீர் செலுத்தல்
- பற்களைத் துலக்குதல்
- வுழூச் செய்தல்
- உடல் முழுவதையும் தேய்த்துக் குளித்தல்

மாணவர்கள் அமைதியாக வாசிக்கத் தொடங்கினார். விளங்காதவை எவையேனும் இருக்கின்றனவா என ஆசிரியர் வினவி தேவையான விளக்கங்கள் அளிக்கப்பட்ட பின்னர்

பின்வரும் ஹதீஸோடு வகுப்பு முடிவடைகிறது.

''நபி ஸ அவர்கள் ஜனாபத்துக்காகக் குளிக்க நாடினால் இரு முன்னங் கைகளையும் மூன்று முறை கழுவிக் கொள்வார்கள். பின்னர் தொழுகைக்காக வுழூச் செய்வது போல வுழூச் செய்து கொள்வார்கள். பின் தமது கைவிரல் களை நீருள் நுழைத்தெடுத்து முடியின் வேர் வரை விரல்களால் கோதிக் குடைந்து கிளறிவிடுவார்கள். பின் இரு கைகளாலும் மூன்றுமுறை நீரை அள்ளித் தலையில் ஊற்றுவார்கள். அதன் பின்புதான் உடல் முழுவதும் நீரை வார்ப்பார்கள்.'' (திர்மிதி)

**பயிற்சி:**

1. பின்வரும் கூற்றுக்கள் சரியாயின் (√) எனவும் பிழையாயின் (✕) எனவும் அடையாளமிடுக.

   i) தொடக்கு, முழுக்கு என்பன சுத்தமான நிலையைக் குறிப்பிடுகின்றன. ( )

   ii) ஹைழ், நிபாஸ் என்பன பெண்களோடு தொடர்பானவை. ( )

   iii) மதி, வதி என்பன உடம்பிலிருந்து வெளியாகும் சுத்தமான திரவப் பொருட்களாகும். ( )

   iv) ஆணோ பெண்ணோ மரணித்தால் அவரைக் குளிப்பாட்ட வேண்டும். ( )

   v) அல்குர்ஆனைத் தொடுவதற்கு ஜனாபத்திலிருந்து நீங்கியிருத்தல் வேண்டும். ( )

   vi) குளிக்குமுன் வுழூச் செய்வது சுன்னத்தாகும். ( )

2. சுருக்கமான விடை தருக

   i) மாதவிடாய் உள்ள பெண்கள் செய்யக் கூடாதவை யாவை?

   ii) ஜனாபத்தை ஏற்படுத்தும் காரணிகள் யாவை?